# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற  கூட்ட அறிவிப்பு

**கூட்ட எண்.39** **நாள்: 10.10.2025.**

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 15.10.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

**ooOoo**

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 15.10.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தங்கள் அன்பார்ந்த**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 10.10.2025.

# அரக்கோணம் நகராட்சி
# சாதாரணக்கூட்டம்

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15.10.2025–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| திருக்குறள்: | **இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை<br>முறைகாக்கும் முட்டாச் செயின்.** |
| விளக்கம்: | **நீதி வழுவாமல் ஓர் அரசு நடைபெற்றால் அந்த அரசை அந்த நீதியே காப்பாற்றும்** |

**<u>பொருள் எண். 1</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன், ஜீலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் 2025–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.746** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

அரக்கோணம் நகராட்சியின் 2024–25 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.747** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலகம் கட்டிடம் கட்டடப்பட்டு பல ஆண்டுகள் ஆனதால் கட்டிடம் பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ள கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலகம் கட்டிடம் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 528/2025/இ1

**தீர்மானம் எண்.748** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (KNMT) 2024–25 ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் குடிநீர் விநியோக முறையை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.21.24 கோடி மதிப்பீட்டில் 23 04.2025.அன்று நடைபெற்ற 20வது CPSMC ஆய்வுக்கூட்டத்தில் நடவடிக்கையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் பணிக்கு முதன்மை பொறியாளர்,சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.18484/2023/DO1 நாள்.06.05.2025 ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநரத்தால் 12.06.2025 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| **1** | Improvement Of Water Supply System At Arakonnam Municipality, Ranipet District | 21.24 | M/S Madras Switchgears Pvt Ltd., | Rs.189978178.08 | M/S Keyem Infra Project Pvt Ltd., | Rs.199618979.15 |

மேற்காணும் பணிகளுக்கான பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>: மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.239/2025/இ1)**

**தீர்மானம் எண்.749** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

<u>**பொருள் எண். 5**</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி கடித ந.க எண். 11919/2022/இஏ2, நாள். 11.06.2025 ல் கடிதத்தில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (tied Grant) 2025– 2026 ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால்வாய்கள் அமைத்தல் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்காணும் பணிகளுக்கு 09.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| .1 | Construction of Storm Water Drain at Othavadai Othavadai Upprapalyam 5th Cross-024029R470, Munusamy Street-024035R539, Sai Nagar Cross Street Main Avenue-024036R551, Malaiyappan Street-024036R552,Malaiyappan Street-024036R552, Wall Patarai Street-024036R565 in Ward No. 29,35,36 in Arakkonam Munipality. | ரூ.21.00 | k.கிரிதரன் | 20,54,967.29 | **C..பத்மநாபன்** | 20,59,555.13 |
| 2 | Construction of Storm Water Drain at Sai Nagar 1st Street 1st Cross-024036R544,Sai Nagar 1st Street 2nd Cross-024036R545,Sai Nagar 1st Street 3rd Cross-024036R546,Sai Nagar 1st Street 4th Cross-024036R547,Sai Nagar 2nd Cross Street-024036R549,,Kaja Nagar - 024036L013 in Ward No. 36 in Arakkonam Munipality. | ரூ.20.00 | k.கிரிதரன் | 19,65,108.28 | **C..பத்மநாபன்** | 19,69,749.27 |

மேற்காணும் பணிகளுக்கான பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.586/2025/இ1)**

**தீர்மானம் எண்.750** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் 2025–26ம் ஆண்டுற்கு வருவாய்நிதியின் கீழ் 16.07.2025 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட Dr.அம்கேத்கர் சிலைகளுக்கு வர்ணம் பூசுதல். **(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.721 நாள் 18.06.2025** | **1.50** | G.மோகனன் | 1,47,580 | V.சதிஷ்குமார் | 1,49,120 |
| **2** | 2025–26ம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான ஒரு JCB மற்றும் 2 CessPool லாரிகளை இயக்குவதற்கு ஒரு ஓட்டுநர் மற்றும் 4 Unskilled Labour பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமையின் மூலம் பணி ஆட்களை பெற்று வாகனங்களை இயக்குதல் பணிகள் மேற்கொள்ளுதல். **(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.722 நாள் 18.06.2025** | **9.30** | V.சதிஷ்குமார் | 9,24,120 | N.பாபு | 9,29,520 |
| **3** | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர்பேட்டை உரக்கிடங்கு பகுதியில் CCTV கேமரா பொருத்தி இயக்கி தருதல். **(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.739 நாள் 18.06.2025)** | **5.00** | V.சதிஷ்குமார் | 4,77,320.01 | N.பாபு | 4,78,533.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02 ஜெய்பீம் நகர் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசைப்பம்பு அமைத்தல். **நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.719 நாள் 18.06.2025)** | **2.00** | P.மனோகர் பிரபு | 1,92,150 | S.ரமேஷ்பாபு | 1,95,560 |

**அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.217/2025/இ1)**

**தீர்மானம் எண்.751 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

இந்நகராட்சியில் 2025-26ம் ஆண்டுற்கு கல்வி நிதியின் கீழ் 16.07.2025 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 நேருஜீ நகர் நகராட்சி பள்ளியில் புதிய கழிப்பறை கட்டுதல் பணி மேற்கொள்ளுதல். | **7.00** | S.ரமேஷ்பாபு | 6,97,575 | P.மனோகர் பிரபு | 6,99,610 |

**அலுவலக குறிப்பு : வரிசை எண்.01ற்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.217/2025/இ1)**

**தீர்மானம் எண்.752 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/இஏ2 நாள் 13.05.2025 அவர்களின் கடிதத்தில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Untied Grant ) 2025- 26ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்பு சிமெண்ட சாலை பணிகளை மேற்கொள்ள ரூ.51.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி

வழங்கப்பட்டுள்ளதற்கு ஒப்பந்தப்புள்ளி 9.07.2025 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| 1. | Relaying of CC Road at Ganesh Nagar 3rd Street- 024003R032,TNHB(M327 - M312)- 024004R122. Old Bazar Road Street(Mahaveer) -024011R260, Periyar Nagar -024032R431, EB Road - 024032R434, Jagajeevanram Road - 024032R421, Kayithe Millath Street-024032R425, V.P. Koil Lane Street-024030R461, Somasundaram Nagar 4th Cross St-024028R517 at Ward No.03,04,11,28,30,32 in Arakkonam Municipality. | **51.00** | M/S P R V Enterprises | 4896209.00 | **C.பத்மநாபன்** | 4898973.00 |

மேற்காணும் பணிகளுக்கான பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.384/2025/இ1)**

**தீர்மானம் எண்.753 நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

அரக்கோணம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 ஆம் ஆண்டின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று முடிவடையில் தருவாயில் உள்ளது. பூங்காக்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் நேரடி ஆய்வின் போது பூங்காக்களில் பள்ளமான பகுதிகளில் மணல் கொண்டு நிரப்பி சமன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு கீழ்க்கண்வாறு தயார் செய்யப்பட்டுள்ளது. பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 T.N.நகர் பகுதியில் பூங்கா மணல் கொண்டு நிரப்பி சமன் செய்தல் பணி மேற்கொள்ளுதல் | 5.00 |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 ரத்தன்சந்த் நகர் பகுதியில் பூங்கா மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல். | 5.00 |

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**ந.க.எண்.528/2025/இ1**

**தீர்மானம் எண்.754 நாள். 15.10.2025**
**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

இராணிப்பேட்டை மாவட்டத்தில், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாள் விழா எதிர்வரும் 14.04.2025 அன்று வாலாஜா அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல துறையின் மூலமாக அணைத்து துறைசார்ந்த 1000 பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழிச்சி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரக்கோணம் நகராட்சியில் சார்பில் இந்நகராட்சிக்குட்பட்ட 89 தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் பொருட்கள் அடங்கிய பெட்டகம் வழங்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **A TO Z Enterprises** Chennai நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 57 (7)–ன்படி [**"The Commissioner may, in cases of emergency, direct the execution of any work or the doing of any act which would ordinarily require the sanction of the council, and the immediate execution or doing of which is, in his opinion, necessary for the service or safety of the public and may direct that the expenses of executing such work or doing such act shall be paid from the municipal fund. 3[and he shall report the action taken under this section and reasons therefor to the council at its next meeting"]** வருவாய் நிதியிலிருந்து ரூ.2,59,657/– வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண் 263/2025/எச்1)**

**தீர்மானம் எண்.755 நாள். 15.10.2025**
**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 11</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித **ந.க.எண்.20383/2022/எச்1 நாள்.15.05.2025ல்** நகராட்சி பகுதிகளில் உள்ள தெருநாய்களுக்கான கருத்தடை அறுவைச்சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இராணிப்பேட்டை, மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களால் நடத்தப்பட்டு வரும் வாராந்திர ஆய்வுக்கூட்டங்களிலும் தெருநாய்களுக்கான ரேபிஸ் தடுப்பூசி அந்தந்த உள்ளூர் அலுவலர்களை தொடர்பு கொள்ளக்கூடிய கால்நடை மருத்துவர்களின் மூலம் தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிறுதப்பட்டுள்ளது. எனவே அதற்கான முதற்கட்டமாக தெருநாய்களுக்களை பிடிப்பதற்கான வலை (Butterfly Net With Aluminium Frame) தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சியில் தெருநாய்களுக்களை பிடிப்பதற்கான வலை (Butterfly Net With Aluminium Frame) இல்லாததால் உடன் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு **57 (7)–ன்படி**

மேற்கொள்ளவும், ["The Commissioner may, in cases of emergency, direct the execution of any work or the doing of any act which would ordinarily require the sanction of the council, and the immediate execution or doing of which is, in his opinion, necessary for the service or safety of the public and may direct that the expenses of executing such work or doing such act shall be paid from the municipal fund. 3[and he shall report the action taken under this section and reasons therefor to the council at its next meeting"] குறைந்த விலைப்புள்ளி வழங்கிய MRC ENTERPRISES, CHENNAI என்பவரின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவினத்தொகை ரூ.**57,230/-** வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.449/2025/எச்1 )

**தீர்மானம் எண்.756** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

அரக்கோணம் நகராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகள் தயார் செய்த செலவினம் ரூ.9200/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்218/2016/பி1)

**தீர்மானம் எண்.757** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

அரக்கோணம் நகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட வருமான வரி பிடித்தம், GST பிடித்தம் ஆகியவற்றை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து உரிய அரசு கணக்கில் தாக்கல் செய்யப்பட்டதற்கான இவ்வலுவலக தணிக்கையாளர் கட்டணம் மற்றும் 2024-2025 ஆண்டின் ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு உட்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்:418/2020/பி1)

**தீர்மானம் எண்.758** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் **2021-2022** ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் **(Outsourcing) 14** தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு, மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் 3**0.06.2025** வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி நீட்டிப்பு காலம் **30.06.2025** அன்று முடிவடையும் நிலையில் உள்ளதாலும் இப்பணிக்கான புதிய ஒப்பந்தப்புள்ளி 23.07.2025 ல் கோரப்பட்டுள்ளதாலும், பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு

காலத்தை 01.07.2025 முதல் புதிய ஒப்பந்தப்புள்ளிக்கான பணி உத்திரவு வழங்கும் தேதி வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே விலைப்புள்ளி விகிதத்தில் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.**7.00** இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.483/2023/எச்1)**

**தீர்மானம் எண்.759 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்து பொது மக்களிடையே கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கலை நிகழ்ச்சிகள் நடத்த விலைப்புள்ளி பெற்று பணிஉத்திரவு வழங்கவும், அதற்கான செலவின தொகை ரூ.50,000/-யினை 2025-26 ஆம் ஆண்டிற்கான வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 557/எச்1/2025)

**தீர்மானம் எண்.760 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை காலத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த புகை தெளிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் பைரெத்திரம் 2% (Pyrethrum 2%) இருப்பு குறைவாக உள்ளதால் 2025-26 ஆம் ஆண்டிற்கு பைரெத்திரம் 2% (Pyrethrum 2%) 100 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் வருவாய்நியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.560/2025/எச்1)**

**தீர்மானம் எண்.761 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை மக்கும் திடக்கழிவுகள், மக்காத திட கழிவுகள் என தரம் பிரித்து ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டு மக்கும் திடக்கழிவுகளை இந்நகராட்சிக்கு சொந்தமான 3 MCC மையங்களில் சேகரிக்கப்பட்டு, அதனை இயற்கை உரமாக தயார் செய்யப்பட்டு பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மக்காத மற்றும் விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை வளமீப்பு மையங்களில் (RRC) சேகரிக்கப்பட்டு அங்கு Baling Machine மூலம் Baling செய்யப்பட்டு வளமீப்பு மையங்களில் (RRC) சேமித்து வைக்கப்பட்டு வருகிறது. மேற்படி வளமீப்பு மையங்களில் (RRC) சேமித்து வைக்கப்பட்டிருந்த உலர் கழிவுகளை EPR முறையில் ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் மூலம் இலவசமாக அகற்றப்பட்டு சிமெண்ட் தொழிற்சாலைக்கு

ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது வளமீப்பு மையங்களில் (RRC) சேகரிக்கப்பட்டு இருப்பில் உள்ள சுமார் 200 மெட்ரிக் அளவிலான உலர் கழிவுகளை அகற்றுவதற்கு ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் மூலம் அப்புறப்படுத்தி சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்க ஒரு மெட்ரிக் டன் ரூ.1500/– வீதம் தொகை வழங்குமாறு ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் மூலம் கோரப்பட்டுள்ளது. எனவே 200 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை அப்புறப்படுத்த ரூ.3.00 இலட்சம் 2025–26 ஆம் ஆண்டிற்கான வருவாய் நிதியின் மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.559/2025/எச்1)**

**தீர்மானம் எண்.762** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சியில் 2025–26ம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் 04.07.2025 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு, கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் ரூ. | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ரூ |
| 1 | **2025–26 வருவாய்நிதி** அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள வார்டுகளில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுக்க 18 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) விநியோகம் செய்தல் | 5.70 | **மரிகொழந்து மகளிர் சுயஉதவிக்குழு** | **568350** | **வெற்றி மகளிர் சுயஉதவிக்குழு** | **571050** |
| 2 | **2025–26 வருவாய்நிதி** அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள வார்டுகளில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுக்க 18 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) விநியோகம் செய்தல் | 5.70 | **சில்வர் ஸ்டார் மகளிர் சுயஉதவிக்குழு** | **568350** | **ஜெயம் மகளிர் சுயஉதவிக்குழு** | **571050** |

வரிசை எண்.01 மற்றும் 02 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அரக்கோணம் நகராட்சியில் டெங்குகாய்ச்சல் பாதிப்பு வருவதால் உடனடியாக DBC பணியாளர்களை நியமிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.316/2025/எச்1)**

**தீர்மானம் எண்.763** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சியில் 2025–26ம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 36 வரை உள்ள வார்டுகளில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுக்க 36 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) மரிகொழந்து மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் சில்வர் ஸ்டார் மகளிர் சுயஉதவிக்குழு ஆகிய சுயஉதவிக்குழுக்களின் மூலம் பெற்று கொசுப்புழு ஒழிப்பு பணிகள் 19.06.2025 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 30.09.2025 தேதியுடன் பணி உத்திரவு முடிவடைவதால் மேலும் 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் வழங்கி வரும் அதே ஒப்பந்தப்புள்ளி தொகையினை DBC பணியாளர்களுக்கு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.12.00 இலட்சம் வருவாய்நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.316/2025/எச்1)**

**தீர்மானம் எண்.764** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ள கலன்கள், தேவையற்ற டயர்கள், உடைந்த பொருட்கள் அப்புறப்படுத்துதல் மேலும் தண்ணீர் தேக்கி வைக்க கூடிய கலன்கள், கீழ்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொசு புழுக்கள் உருவாகாமல் தடுக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும், மேலும் காய்ச்சல் கண்ட நபர்களின் விவரங்களை சேகரித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பணிகள் 07.07.2025 முதல் மரிக்கொழுந்து மகளிர் சுய உதவிக்குழு மற்றும் சில்வர் ஸ்டார் மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 36 களப்பணியாளர்களை (DBC) மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் 2024–25 ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணிஉத்திரவு 30.09.2025 தேதியுடன் முடிவடைந்துள்ளதால் மேலும் 6 மாதத்திற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான செலவின தொகை ரூ,24.60 இலட்சம் 2025–26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின கீழ் செலவினம் மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி**க்கு வைக்கப்படுகிறது**.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

(ந.க.எண். 316/2025/எச்1)

**தீர்மானம் எண்.765** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சியில் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தளவாடச்சாமன்கள் தேவைப்படுவதால் 2025–26 ஆம் ஆண்டிற்கான கீழ்காணும் தளவாடச்சாமன்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பாதுகாப்பு உபகரணங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அன்னகூடை | 50 |
| 2 | மலார்கள் | 100 |
| 3 | கால்வாய் கரண்டி | 50 |
| 4 | தென்னந்துடப்பம் | 200 |
| 5 | பெரிய முள் கம்பி | 50 |
| 6 | முள் ஜார்டு | 50 |
| 7 | வெட்டுகத்தி | 20 |
| 8 | மண்தள்ளும் பிரஸ் | 50 |
| 9 | ரப்பர் கையுறை | 500 |
| 10 | முககவசம் | 1000 |

**அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.556/2025/எச்1)**

**தீர்மானம் எண்.766** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ரூ.508.18 இலட்சம் மதிப்பீட்டில் (ஒரு வருடத்திற்கு) வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில், வார்டு எண்.01 முதல் 36 வரையில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 17.03.2023 அன்று கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்திட நகர மன்ற தீர்மான எண். 391 நாள்.18.05.2023–ல் மன்ற அனுமதி வழங்கப்பட்டு, 15.06.2023 முதல் 14.06.2024 வரை ஒரு ஆண்டிற்கு மட்டும் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும் நகர மன்ற தீர்மான எண்.288 நாள்.19.01.2023ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பணிகள் திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாமண்டிற்கான பணியினை நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் முதலாமண்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட 15.06.2023 முதல் 14.06.2024 வரை காலத்தில் திடக்கழிவு தொடர்பான பணிகளில் சுணக்கமின்றி பொதுமக்களிடம் புகார்கள் இன்றியும், நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏதும் வராத வண்ணம் நல்ல முறையில் பணி செய்துள்ளதை தொடர்ந்து நகர மன்ற தீர்மான எண்.527 நாள்.12.07.2024ல் 15.06.2024 முதல் 14.09.2024 வரை மூன்று மாதங்களுக்கும், நகர மன்ற தீர்மான எண்.554 நாள்.26.09.2024ல்

15.09.2024 முதல் 14.06.2025 ஒன்பது மாதங்களுக்கும், நகர மன்ற தீர்மான எண்.733 நாள்.18.06.2025ல் 15.06.2025 முதல் 15.09.2025 வரை பணி நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்சமயம் 16.09.2025 முதல் 14.06.2026 வரை பணியினை நீடிப்பு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.2682/2022/எச்1)**

**தீர்மானம் எண்.767 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.23</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக, நகர் பகுதியில் திடக்கழிவுகளை அகற்றிய பின் கிருமி நாசினிகள் தெளித்து சுத்தம் செய்யவும், நகராட்சி பேருந்து நிலையம், தினசரி சந்தைகள், மீன் மார்க்கெட், மற்றும் பொது இடங்களில் சுத்தம் செய்யவும், கிருமி நாசினிகள் தேவைப்படுகிறது. மேலும் வருகின்ற வடகிழக்கு பருவமழையினை எதிர்கொண்டு மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் மழைநீரை அப்புறப்படுத்திய பின் கிருமி நாசினிகள் தெளித்து தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவும். நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் தேவைப்படுகிறது. தற்போது நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் மிகவும் குறைவாக உள்ளதால் மேற்படி கிருமி நாசினிகளை கொள்முதல் செய்ய ரூ.2,50,000/- இலட்சம் 2025-26 ஆம் ஆண்டிற்கான வருவாய்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 558/எச்1/2025)

**தீர்மானம் எண்.768 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 24</u>**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தவும் முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்களை 2025-26 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கம் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.550/2025/எச்1)**

**தீர்மானம் எண்.769 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 25</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அரசு வழிகாட்டுதலின்படி பொது மக்கள் பயன் பெறும் வகையில் படிப்பகம் அமைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க புதிய பேருந்து நிலையத்தில் படிப்பகம் அமைத்திட பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.770 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 26</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் மழைநீர் கால்வாய் பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடும் ஏற்படுவதை தொடர்ந்து கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் மழைநீர் கால்வாய் புதுப்பிக்க தோராய செலவினம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்,09 இரட்டை மலை சீனிவாசன் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 9.00 |
| 2 | வார்டு எண்,09 மோசூர் ரோட்டில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 13.50 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.771 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 27</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு ஒருங்கிணைந்த சமையற்கூடத்திலிருந்து (Common Kitchen) சமைத்து கொண்டு வரப்படும் காலை உணவுகளை பள்ளிக் கூடங்களில் பயிலும் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு உணவு பரிமாறும் பணிக்கு ஒருவர் 100 மாணவர்களுக்கு என்ற விகித்த்தில் சுய உதவிக்குழு, இல்லம் தேடி கல்வி பணியாளர் அல்லது விருப்பம் உள்ள குழந்தைகளின் தாயார் ஆகியோரில் ஒருவர் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியரின் அனுமதியோடு நியமித்து மாதம் தோறும் ரூபாய் மதிப்பூதியம் 1500வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -28 அவர்களின் நே.மு.கடித எண்.17404/2022/M1-1 நாள்.25.07.2025ல் கடிதத்தின்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு நிதியுதவி பெறும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தலின் பேரில் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட நிதியுதவி பெறும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 381 மாணவ மாணவிகளுக்கு உணவு பரிமாறும் பணிக்கு ஒரு நபருக்கு மாத ஊதியம் ரூ.1500/- ஆகும், ஒரு மாதத்திற்கு மொத்தம் 5 பணியாளர்களுக்கு 5 X ரூ.1500= ரூ.7500/- ஆகும், ஒரு ஆண்டிற்கு 5 X ரூ.7500= ரூ.90000/- ஆகும் தோராய செலவினத்தை கல்வி நிதிநிதியில் இருந்து வழங்க நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

. அலுவலக குறிப்பு : திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.403/2023/இ1)

**தீர்மானம் எண்.772** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.28</u>**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 12 நகராட்சி பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 791 மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் காலை உணவு தயார் செய்து வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி 19.05.2023 அன்று கோரப்பட்டு, அன்னபூர்ணா கேட்ரிங் சர்வீஸ், அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு காலை உணவு பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் நே.மு.கடித எண்.17404/2022/M1–1 நாள்.25.07.2025ல் கடிதத்தின்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு நிதியுதவி பெறும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தலின் பேரில் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட நிதியுதவி பெறும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 381 மாணவ மாணவிகளுக்கு உணவு தயார் செய்து வழங்குவதற்கு ஏற்கனவே உணவு தயார் செய்து வழங்கும் அன்னபூர்ணா கேட்ரிங் சர்வீஸ், அரக்கோணம். அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட அதே விலைப்புள்ளியில் உணவு தயார் செய்து வழங்குவதற்கு நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.403/2023/இ1)

**தீர்மானம் எண்.773** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.29</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை –28 அலுவலக அறிக்கையின்படி அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் உள்ள (Pot Holes & Patches) சரிசெய்ய விவரங்கள் கோரப்பட்டு, அதன்படி அரக்கோணம் நகராட்சியில் உள்ள சாலைகளில் Pot Holes & Patches) சரிசெய்ய மதிப்பீடு ரூ.9,24 இலடசத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 946/2025/இ1)**

**தீர்மானம் எண்.774** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.30**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-26 ஆம் ஆண்டு கீழ்காணும் 4 எண்ணிக்கையிலான பணிக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடித செயல்முறை ந.க.எண்.அ4/1700/2025 நாள்.01.08.2025ல் ரூ.23.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் பணிகளுக்கு 26.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2ல் மாதவ நகர் விரிவாக்க பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | ரூ.10.00 | C.பத்மநாபன் | 980489.14 | K.முனுசாமி | 992167.60 |
| 2 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 கக்கன் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | ரூ.5.00 | R.டில்லிபாபு | 492233.46 | M.கோகுல கிருஷ்ணன் | 493599.90 |
| 3 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28ல் சோமசுந்தரம் நகர் 4-வது தெரு சந்து மற்றும் சோமசுந்தரம் விரிவாக்க பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | ரூ.5.00 | M.கோகுல கிருஷ்ணன் | 479799.80 | R.டில்லிபாபு | 480903.10 |
| 4 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29ல் உள்ள லஷ்மனன் நகர் 3-வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்தல். | ரூ.3.60 | M.கோகுல கிருஷ்ணன் | 350844.44 | R.டில்லிபாபு | 351805.79 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.727/2025/இ1)**

**தீர்மானம் எண்.775** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 31**

அரக்கோணம் நகராட்சியில் ஆணையர் மற்றும் சத்துணவு பிரிவு தூய்மை திட்ட பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் கருவூலம் மூலம் பெறப்பட்டு வருவதால் கருவூலத்திற்கான பட்டியல் இணைய வழியாக சமர்பிக்கப்பதற்கான ஆணையருக்கான DSC Card மற்றும் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை இணையதளத்தில் பதிவேற்ற செய்வதற்கான ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோருக்கான DSC Card – களை வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.15,000/–ஐ தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண். 946/2025/இ1)**

**தீர்மானம் எண்.776 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 32**

இந்நகராட்சியில் 2025–26ம் ஆண்டுற்கு வருவாய் நிதியின் கீழ் 12.09.2025 தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு. கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | | மதிப்பீட்டைவிட அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம் (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக ஒப்பந்தப்புள்ளி |
| 1) | நகாட்சிக்குட்பட்ட சிமெண்ட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளில் உள்ள Pot Holes மற்றும் Patches சரிசெய்தல். | **9.24** | D.ராஜேஸ்வரி | 905867,82 | C.பத்மநாபன் | 909768,79 |

**அலுவலக குறிப்பு : வரிசை எண்.01ற்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.946/2025/இ1)**

**தீர்மானம் எண்.777 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 33**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.768/2022/சி1 நாள்.02.05.2025ல் கடிதத்தில், அலுவலக பயன்பாட்டிற்கு All in One Desktop Computer with Accessories கொண்ட கீழ்க்கண்டுள்ள 1 எண்ணிக்கை கணினி வாங்கி வழங்குமாறு கோரப்பட்டுள்ளதற்கு கணினி நிறுவனங்னளிடமிருந்து விலைப்பள்ளிகள் கோரப்பட்டுள்ளதில் பின்வருமாறு.

| S No | Description | Quantatity | M/S Tamilnadu infotech Chennai | M/S Syscon Systems Chennai | M/S Sagar Electronics Pollachi |
|---|---|---|---|---|---|
| 1 | Inspiron AIO DT 5410-All in one desktop 12 th Generation Intel Core i5 - 1235U Processor (8MB Cache, upto 4.2 GHz) 8GB, 8GBx1, DDR4, 3200 MHz<br>256GB M.2 PCIe NVMe Solid State Drive (Boot) 1TB 5400 rpm 2.5" SATA Hard Drive (Storage) 23.8-inch FHD + (1920 x 1200) Anti-Glare Narrow Border infinity Non-Touch Display.<br>Windows 11 Home Single Language<br>English Office Home & Student 2021<br>McAfee(R) Multi Device Secunty 15 month subscription Dell Wireless Keyboard and Mouse (international English)<br>Intel Wi-Fi6 2x2 (Gig+) and Bluetooth Black Cover with Black Molded Speaker Mesh<br>FHD IR Camera | 1 No | 121235.00 | 122493.00 | 123750.00 |
| 2 | External HDD (SSD) - 1 TB | 1 No | 15260.00 | 15800.00 | 16100.00 |
| | | Total | 136495.00 | 138293.00 | 139850.00 |

மேற்படி வரப்பெற்றுள்ளி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S Tamilnadu infotech Chennai அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 946/2025/இ1**

**தீர்மானம் எண்.778** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 34</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26ல் பகுதியில் உள்ள A N கண்டிகை 4-வது தெரு, T N நகர் 4, 6, 7 மற்றும் 8 -வது தெருக்களில் சிறுபாலம் பழுதடைந்து மழைநீர் கால்வாயில் நீர் தேக்கமடைந்து பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இதனால் மேற்படி தெருக்களில் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது. அதற்கான தோராய செலவினம் ரூ.8.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான

தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.779 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 35**

அரக்கோணம் நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2024–25ஆம் ஆண்டின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.அ/45101202/4 நாள்: 02.01.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண்.21 நியாய விலைக்கடை கட்டும் பணிக்கு 07.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 17.02.2025 பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நியாய விலைக்கடை அமைக்கும் பணியில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மேற்கூரை மற்றும் தரைத்தளம் அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 946/2025/இ1**

**தீர்மானம் எண்.780 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 36**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள மீனம்மாள் சிவராஜ் தெருவில் சாலை சீரராக இல்லாததால் பொது மக்கள் போக்குவரத்துக்கு சிரமத்திற்குள்ளாகின்றனர். மேற்படி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கவும் மற்றும் வார்டு எண்.10ல் உள்ள தெருக்களுக்கு பெயர் பலகை அமைக்க தோராய செலவினம் ரூ.7.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.781 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 37**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17ல் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தின் பின்றபுறம் அமைந்துள்ள சாலையை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் நேரடி ஆய்வின் போது பழுதுப்பார்க்க அறிவுறுத்தப்பட்டது. மேற்படி சாலையை பழுதுப்பார்க்க தோராய செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025–26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.782 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 38</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2024-25ஆம் ஆண்டின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.அ/45101202/4 நாள்: 02.01.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்தில் அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண். ல் 8 பேருந்து நிழற்குடை கட்டும் பணிக்கு 07.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **17.02.2025** பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிழற்குடை அமைக்கும் பணியில் கிரானைட் மின்சாரம் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.**3.50** இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 946/2025/இ1)**

**தீர்மானம் எண்.783 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 39</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள கணேஷ்நகர் 14. 14A. 15 ஆகிய தெருக்களில் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது. சிறுபாலம் அமைக்க தோராய செலவினம் மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 528/2025/இ1)

**தீர்மானம் எண்.784 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 40</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் சாலை வசதி மற்றும் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது. கீழ்குறிப்பிட்ட பகுதிகளில் சாலை மற்றும் சிறுபாலம் அமைக்க தோராய செலவினம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்,25 டில்லியப்பன் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 36.50 |
| 2 | வார்டு எண்,25 போல் நாயுடு தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 528/2025/இ1

**தீர்மானம் எண்.785 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 41</u>**

அரக்கோணம் நகராட்சியில் உள்ள பூங்காக்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் நேரடி ஆய்வின் போது பூங்காக்களை பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகராட்சிக்குட்பட்ட அனைத்து பூங்காக்களை பராமரிக்க 2025-2026 ஆம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணிக்கான தொகையினை 2025-26 ஆம் ஆண்டு வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.528/2025/இ1)**

**தீர்மானம் எண்.786 நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 42</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28, அவர்களின் கடிதம் ந.க.எண். 7705/2024/ADB நாள் 11.08.2025ல் கடிதத்தில் Tamil Nadu Green Climate Company (TNGCC) – Tamil Nadu Adaptive and Resilient Districts (TN – CARD) 2025-26 ஆம் ஆண்டிற்கு அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்ட நீர் நிலையை மதிப்பிடு ரூ.10.00 கோடியில் புதுப்பித்தல் பணிக்கான திட்ட மதிப்பீடு, வரைபடங்கள், Design Calculation தொழில்நுட்ப அங்கீகாரம் பெற்று தருதல் போன்ற பணிகள் தனியர் கலந்தாலோசகர் மூலம் தயார் செய்தல் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதற்கு பின்வரும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | M/S TERRA AMATA DESIGN CONSORTIUM CHE-002 | M/S JPR Architects & Engineers Chennai. | M/S M Square Architects Chennai -07 |
|---|---|---|---|---|
| 1 | Preparation and Submission of Detailed Project Report with Design Calculation, Drawings, Cost Estimation and Consultancy Services for Development of Lakshmi Nagar Lake in Arakkonam Municipality | **2.00%** | **2.25%** | **2.15%** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **M/S TERRA AMATA DESIGN CONSORTIUM CHE-002 அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க** மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**196/2025/இ1

**தீர்மானம் எண்.787 நாள். 15.10.2025**

**நகரமன்ற கூட்டத்தில் ஒருமனதாக ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 43**

இந்நகராட்சியில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கீழ் கண்ட விவரப்படி பணியாளர்களுக்கு SPF (சிறப்பு சேம நலநிதி)அதற்கான வட்டி தொகை மற்றும் அரசு பங்களிப்பு தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பெயர் | ஓய்வு பெற்ற தேதி | அசல் தொகை | அரசு மானியம் | வட்டி தொகை | மொத்தம் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருமதி.புல்லம்மாள் | 31.05.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| 2 | திருமதி.விஜயசாந்தி | 31.05.2025 | 2,960 | 10,000 | 11,159 | 24,119 |
| 3 | திரு.சண்முகம் | 31.05.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| 4 | திருமதி.வனஜா | 19.03.2025 | 2,960 | 10,000 | 17,951 | 30,911 |
| 5 | திரு.டேவிட் | 31.05.2025 | 2,960 | 10,000 | 11,159 | 24,119 |
| 6 | திரு.பார்த்தசாரதி | 30.04.2025 | 2,960 | 10,000 | 11,077 | 24,037 |
| 7 | திரு.பாளையம் | 31.05.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| 8 | திருமதி.கிரிஜா | 31.05.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| 9 | திரு கிருஷ்ணய்யா | 30.06.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| 10 | திரு.ரவி கொண்டடு | 30.06.2025 | 16,100 | 10,000 | 23,014 | 49,114 |
| | | **மொத்தம்** | **1,08,440** | **1,00,000** | **1,89,430** | **3,97,870** |

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.788** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 44**

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.அ5/ 10509/2025 நாள்.18.09.2025 ல் புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல, 2025– 2026 ஆம் ஆண்டிற்கான புத்தகக் திருவிழா நடத்திட அரசாணை நிலை எண்.205 பள்ளி கல்வித் (பொ.நூ.2) துறை நாள்.18.09.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் எதிர் வரும் 03.10.2025 முதல் 12.10.2025 வரை புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது. எனவே, புத்தக வாசிப்பை அனைத்து தரப்பு மக்களிடம் கொண்டு செல்ல முன்னெடுக்கும் முயற்சிகளை செயல்படுத்தும் விதமாக அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, புத்தக திருவிழா நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் நிதி, விளம்பரதாரர் மூலம் பெறப்படும் நிதி மற்றும் அரசின் பிற துறை சார்ந்த நிதியினையும் கண்டறிந்து பயன்படுத்தலாம் என வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டுள்ளதன் அடிப்படையில் புத்தகத் திருவிழாவிற்கு அரக்கோணம் நகராட்சி பங்கு தொகையாக ரூ.50,000 /– செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மேற்கண்ட புத்தகத் திருவிழா நடத்துவதற்கான தொகையினை செலுத்த நகர மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ரூ. 50,000/– கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதற்க்கு. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.களண்.915/2025/எப்1)**

**தீர்மானம் எண்.789** **நாள். 15.10.2025**

**மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 45</u>**

சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறைப்படுதுதல்) சட்டம் 2014 மற்றும் தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன்படி அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரம் வியாபாரம் செய்துவந்த நபர்கள் குறித்து கணக்கெடுப்பு 2019 ம் வருடத்தில் நடத்தப்பட்டு 537 நபர்கள் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி நகரவிற்பனைக்குழு அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 23913/2023/UPA , நாள் 26.08.2025–ல் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை கிளையில் நடைபெற்ற வழக்கு W.A.(MD).எண்.758/2024–ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்திரவில் குறிப்பிட்டிருந்த விவரங்களை மேற்கோள்காட்டி விற்பனை கட்டணம் ( Vending Fee ) 31.10.2025 ம் தேதிக்குள் நிர்ணயம் செய்ய மன்ற ஒப்புதல் பெற தெரிவித்து வரப்பெற்றுள்ள மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், விற்பனைகட்டணம் ( Vending Fee ) விகிதம் நிர்ணயித்து 01.11.2025 முதல் வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015– ன் விதி எண் . 11 (3)– ன் படி அரக்கோணம் நகராட்சி பகுதிக்கான நகரவிற்பனை குழு தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு கருத்து சமர்பிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க. எண். 3747/2024/ஆ3, நாள். 13.08.2025– ல் கீழ்கண்ட நபர்களைக் கொண்டு அரக்கோணம் நகராட்சி பகுதிக்கான நகரவிற்பனை குழு அமைத்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி விபரம் | நியமனஉறுப்பினர் / தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் | உறுப்பினர்கள் பெயர் மற்றும்முகவ ரி விவரம் |
|---|---|---|---|
| 1 | தலைவர் | நியமன உறுப்பினர் | ஆணையாளர்,<br>அரக்கோணம் நகராட்சி |
| 2 | உறுப்பினர்/ மருத்துவ அலுவலர் | நியமன உறுப்பினர் | மருத்துவ அலுவலர்,<br>நகர்ப்புறநிலையம் சுகாதார ஆரம்ப ,<br>அரக்கோணம் |
| 3 | உறுப்பினர் | நியமன உறுப்பினர் | (1நகரமைப்பு அலுவலர்<br>அரக்கோணம் நகராட்சி |
| 4 | உறுப்பினர்<br>(காவல்துறை) | நியமன உறுப்பினர் | ஆய்வாளர் காவல் ( 1,<br>போக்குவரத்து காவல்துறை,<br>அரக்கோணம்.<br>காவல்ஆய்வாளர் (2, (சட்டம் மற்றும் ஒழுங்கு ) ,நகரம் அரக்கோணம் . |

| | | | |
|---|---|---|---|
| 5 | உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | 06.08.2024 அன்று தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்<br>1. .திரு S. .–பழனி– 58/70 ஜகஜீவராம் ரோடு, காலிவாரி கண்டிகை, அரக்கோணம்<br>**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** :0238037311144<br>2. . திருமதி A பரிதா. 56,மணியகாரதெரு , பஜார்ரோடு , அரக்கோணம்<br>**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** :0352151678287<br>3.திருமதி.P ஜெயலட்சுமி.<br>1,அண்ணாதெரு காந்திநகர் , அரக்கோணம்,**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** : 02738832336293<br>4. திரு .S.முத்து 1/105.திருப்பூர் குமரன் தெரு , அரக்கோணம்<br>**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** :0029660459217.<br>.திரு .5M , மகாதேவன்.30,A, 2/ பாலசுந்தரம் தெரு அரக்கோணம்,<br>**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** :0096546587422.<br>6. திரு.Pசதாசிவம் 1/33.திருத்தணிரோடு அரக்கோணம்<br>**சாலையோரவியாபார அடையாள அட்டை எண்** :0251308018230. |
| 6 | உறுப்பினர்,<br>வணிகர் சங்கம் | நியமன உறுப்பினர் | திருK..M.தேவராஜ்,<br>தலைவர் அனைத்து வியாபாரிகள் , வணிகர்சங்கம்,<br>அரக்கோணம் .<br>செல் : 9443106600.<br>2. திரு. .Gஎத்திராஜ்,<br>தலைவர் மளிகை வியாபாரிகள்,சங்கம் அரக்கோணம் .<br>செல் : 9443034446. |

| | | | |
|---|---|---|---|
| 7 | உறுப்பினர் (என்.ஜி.ஓ) | நியமன உறுப்பினர் | திரு. P. ராஜேஷ்,<br>தலைவர் ,ஜாயின் ஹான்ட்ஸ் ,<br>சோசியல் வெல்பர் அசோசியேஷன்,<br>அரக்கோணம் .<br>செல் : 9894803665. |
| 8 | உறுப்பினர்<br>குடியிருப்போர்<br>நலச்சங்கம் | நியமன உறுப்பினர் | திரு. A.Rபுக .ழேந்தி<br>தலைவர், மாதவநகர் வீட்டு வசதி<br>குடியிருப்போர்<br>நலசங்கம் அரக்கோணம் .<br>செல் : 9944811950 |

மேற்படி நகரவிற்பனைக்குழுவின் கூட்டம் 30.09.2025-ம் தேதியன்று நடத்தப்பட்டு இந்நகர எல்லைக்குள் கீழ்கண்ட தெருக்கள் உள்ளடக்கிய 3 விற்பனை பகுதி (Vending zone) மற்றும் விற்பனை அல்லாத பகுதி 3 ( Non Vending zone) ஏற்படுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**விற்பனை பகுதிகள் (Vending zone)**

| **வஎண்.** | **தெருக்களின் பெயர்** |
|---|---|
| 1 | திருத்தணி ரோடு (காந்தி சிலை முதல் நகராட்சி எல்லை வரை இந்திரா ) |
| 2 | சுவால் பேட்டை ரோடு இந்திரா காந்தி சிலை முதல் மருத்துவ மனை மேற்கு ) (பகுதி வரை |
| 3 | தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பிரதான சாலை |

**விற்பனை அல்லாத பகுதிகள் (Vending zone)**

| **வஎண்.** | **தெருக்களின் பெயர்** |
|---|---|
| 1 | அரசு மருத்துவமனை சாலை மற்றும் பழைய பேருந்து நிலையம் |
| 2 | புதிய பேருந்து நிலையம் |
| 3 | மார்கெட் பகுதிகள் |

தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015- ன் விதிஎண்.9 -ல் குறிப்பிட்டுள்ளபடி அரக்கோணம் நகரத்தில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ள நபர்களிடமிருந்து வசூலிக்க வழிவகை தரப்பட்டுள்ளது. இதன்படி விற்பனை கட்டணம் (Vending fees ) நிர்ணயம் செய்யபதிவுத்துறை வழிகாட்டி மதிப்பு ( Guide Line Value ) புள்ளி விவரம் பத்திர பதிவுத்துறையின் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டதில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள தெரு / பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்பு ( Guide Line Value ) அதிகபட்சம் ஒரு சதுரஅடிக்கு ரூபாய் 5500 /-உள்ளது. இந்த அதிகபட்ச வழிகாட்டி மதிப்பிற்கு விற்பனை கட்டணம் கணக்கீடு செய்தால் மேற்படி வழிகாட்டிமதிப்பின் 1% தொகையானது ரூபாய் 550/-மட்டுமே வருகிறது.ஆனால் தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015 -ன் விதிஎண். 9-ல் தெறிவிக்கப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச விற்பனை கட்டணம் கீழ்கண்ட பட்டியளில் குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ . எண். | வகைப்பாடு | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான வியாபாரி முழு ) ( நேரம் | சதுர அடிகள் வரை 10 | –/750 ஒரு) (வருடதிற்கு |
| | | 25 சதுர அடிகள் முதல் 10 சதுர அடிகள் வரை | –/1500 ஒரு ) (வருடதிற்கு |
| | | சதுர அடிகளுக்கு மேல் 25 | –/3000 ஒரு ) (வருடதிற்கு |
| 2. | நிலையான வியாபாரி பகுதி ) நேரம் அல்லது நேரம் பகிர்வு ( முறை | சதுர அடிகள் வரை 10 | –/375 ஒரு ) (வருடதிற்கு |
| | | 25 சதுர அடிகள் முதல் 10 சதுர அடிகள் வரை | –/ 750 ஒரு ) (வருடதிற்கு |
| | | சதுர அடிகளுக்கு மேல் 25 | –/1500 ஒரு ) (வருடதிற்கு |
| 3. | நகரும் நிலை வியாபாரி ) ( தானியங்கி வாகனத்துடன் | சதுர அடிகள் வரை 10 | –/750 ஒரு ) (வருடதிற்கு |
| | | 25 சதுர அடிகள் முதல் 10 சதுர அடிகள் வரை | –/1500 ஒரு ) (வருடதிற்கு |
| | | சதுர அடிகளுக்கு மேல் 25 | –/3000 ஒரு ) (வருடதிற்கு |
| 4. | நகரும் நிலை வியாபாரி ) ( தானியங்கி வாகனமின்றி | சதுர அடிகள் வரை 10 | –/375 ஒரு ) (வருடதிற்கு |
| | | 25 சதுர அடிகள் முதல் 10 சதுர அடிகள் வரை | –/ 750 ஒரு) வருடதிற்கு( |
| | | சதுர அடிகளுக்கு மேல் 25 | –/1500 ஒரு ) (வருடதிற்கு |
| 5. | நகரும் நிலை வியாபாரி ( தலைச்சுமை ) | --- | –/250 ஒரு ) (வருடதிற்கு |

இதன்படி அரக்கோணம் நகரத்தில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ள நபர்களிடமிருந்து சம்மந்தப்பட்ட

சாலையோரவியாபாரிகளின் பயன்பாட்டில் இருந்துவரும் இடத்தின் பரப்பளவிற்கு ஏற்ப (Area) மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு விற்பனை கட்டணம் (Vending fees) நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந. க. எண் : 1626/2016/எப் 1

**தீர்மானம் எண்.790** **நாள். 15.10.2025**

**நகரமன்ற கூட்டத்தில் ஒருமனதாக ஒத்திவைக்கப்பட்டது.**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.